**கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் கூட்டுறவு அபிவிருத்தி நிதியம் - 2015**

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையாள பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்தாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக ரூபா 350,000 கிரயமான கட்டிடம் முழுமையாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தும் தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வழுவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீள்திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கூட்டுறவுச் சங்ககக் கடன் மற்றும் பெறவேண்டிய 02 கடன் வட்டி விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 31,688,811 ஆக இருந்த போதிலும் பட்டோலையின் பிரகாரம் அம் மொத்தம் ரூபா 55,279,605 ஆனமையால் ரூபா 23,590,794 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

#### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 54,828,396 கூட்டுத்தொகையான கூட்டுறவுக் கல்லூரி கடன், லொறி வண்டிக் கடன், மனிதவள கூட்டுறவுக் கடன், லொறி வண்டி நிதியுதவி மற்றும் 2013 இல் மிகை நிதியத்திற்கு வழங்கப்பட்ட இருப்புக்களுக்குரிய கடன் கோவை மற்றும் கடன் உடன்படிக்கைகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகையில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்ட ரூபா 3,183,600 கூட்டுத்தொகையான செயலாற்றல் முற்பணங்கள் மற்றும் நீதிமன்ற நட்டஈடு என்பன 7 வருடங்களாக அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2008 ஆம் ஆண்டு முதல் நடைமுறைச் சொத்தின் கீழ் காண்பிக்கப்பட்ட ரூபா 2,411,653 கூட்டுத்தொகையான மதிப்பிழந்த காசோலைகளுக்குரிய கடன்பட்டோர்களை இனங்கண்டு அந்தப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்படுகின்ற அரசாங்கக் கணக்கிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 180,394 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 188(2) | 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 300,000 கூட்டுத்தொகையான வைப்புச் செய்யப்பட்டிருந்தும் தேறாத 02 காசோலைகள் தொடர்பாக 2016 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 396 | 2010, 2012, 2013 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டிருந்தும் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்கள் முதல் 05 வருடங்களை விஞ்சிய ரூபா 54,964 கூட்டுத்தொகையான 07 காசோலைகள் தொடர்பாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1978 திசெம்பர் 31 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய 423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | |
| (i) 4.1 ஆம் பந்தி | மீளாய்வாண்டின் வருடாந்த பாதீட்டிற்காக உரிய அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்று தேசிய பாதீட்டு பணிப்பாளர் நாயகத்திற்கும் அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 4.2 ஆம் பந்தி | நிதியத்திற்காக தனிப்பட்ட வங்கிக் கணக்கும் புத்தகங்களும் பேணப்படுமாயின் அக் கணக்குகள் நாள்தோறும் இணக்கம் செய்யப்பட்டு செயன்முன்னேற்றம் தொடர்பாக ஒவ்வொரு காலாண்டிற்காகவும் அறிக்கை அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(iii) 4.3 ஆம் பந்தி — கணக்காண்டு முடிவடைந்து 2 மாதங்களுக்குள் மீளாய்வாண்டிற்கான திரண்ட நிதியத்தின் வேறுபாடுகளைக் காண்பிக்கின்ற கூற்றொன்று அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கான பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 7,458,554 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 11,998,614 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 19,457,168 தொகையான அதிகரிப்பைக் காண்பித்தது. மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 9,821,993 ஆல் குறைவடைந்திருந்த போதிலும், ஏனைய செலவினங்கள் ரூபா 1,633,642 இனாலும், வெளிநாட்டுப் பிரயாணச் செலவினம் ரூபா 1,303,334 இனாலும் விளரம்பர மற்றும் விற்பனைச் செலிவனம் ரூபா 8,339,365 இனாலும் மற்றும் மானியச் செலவினம் ரூபா 18,414,346 இனாலும் குறைவடைந்தமை இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதிவிளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2011 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன் 2012, 2013 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது மிகையொன்று காணப்பட்டது. எவ்வாறாயினும் ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கவனத்தில் கொள்ளும் போது 2011 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது பங்களிப்பு முறையே ரூபா 155,473,139 தொகை மற்றும் ரூபா 10,636,877 மறைப் பெறுமதியாகக் காணப்பட்டதுடன் 2012, 2013 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 31,949,148 ரூபா 5,861,199 மற்றும் ரூபா 8,899,693 நேர்ப் பெறுமதியைக் கொண்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளர்யவு

### 4.1 செயலாற்றல்

1974 சனவரி 10 ஆந் திகதிய 93/5 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட கூட்டுறவு விதிகளின் 43 ஆவது பிரிவின் பிரகாரம் கூட்டுறவு நிதியத்தின் பணம் கூட்டுறவு கல்வி, பரவலாக்கல் மற்றும் விளம்பர வேலைகள், கூட்டுறவு சங்கங்களில் முகாமைத்துவ செயற்திறனை அபிவிருத்தி செய்தல் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவி செய்வதற்காக பயன்படுத்தப்படுத்தப்பட முடியும்.

### 4.2 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வ/ப கொபெய்கனே பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு 2012 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 3,000,000 கடன் தொகையிலிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 2,983,090 மீதியொன்றும் நிலுவையாகவிருந்த வட்டி ரூபா 630,900 தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்திற்கு அறவிட வேண்டிய ரூபா 10,542,980 தொகையான செயற்பாடற்ற கடன் மீதியில் மீளாய்வாண்டின் போது ரூபா 55,414 தொகை மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. அந்த செயற்பாடற்ற கடன் மீதியில் 20 கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 8,270,900 கூட்டுத்தொகையான கடன் பணத்திலிருந்து எந்தத் தொயையும் அறவிடப்படாதிருந்ததுடன் அந்த கடன் தொகையை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது நடைமுறைக் கணக்கில் ரூபா 17,000,000 சராசரியான மீதியொன்று பேணப்பட்டதுடன் மிகைப் பணத்தை இனங்கண்டு அந்தப் பணத்தை வட்டி வருமானமொன்றைப் பெறும் வகையில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010, 2011 மற்றும் 2012 இலிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 141,522 கூட்டுத்தொகையான இனங்காணப்படாத 05 வங்கி செலவு மீதிகள் 2016 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 ஆம் ஆண்டின் போது உருளைக்கிழங்கு கொள்வனவு செய்து திவிநெகும நலனாளிகளுக்கு இலவசமாகப் பகிர்ந்தளிப்பதற்காக சுழற்சி நிதியத்திலிருந்து ரூபா 10,000,000 தொகை ஊவா மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு வழங்கப்பட்டிருந்தது. இதில் கொள்வனவு செய்யப்பட்ட உருளைக்கிழங்கு நாட்டிலுள்ள சகல திவிநெகும நலனாளிகளுக்கும் 02 கிலோகிராம் வீதம் பகிர்ந்தளிப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் வடமேல் மாகாண திவிநெகும நலனாளிகளுக்கு மாத்திரமே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. இதன் போது கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வணிக அமைச்சின் செயலாளருக்கும் திவிநெகும திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கும் இடையே காணப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் இந்தப் பணம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக எழுத்துமூல உடன்படிக்கை காணப்படவில்லை. இந்தப் பணம் 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை நிதியத்திற்கு மீளளிப்புச் செய்யப்படாதிருந்ததுடன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் அந்தப்பணம் மீளளிப்புச் செய்ய முடியாததாக அறவிக்கப்பட்டிருந்தது.

## 5. கண்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப் 423 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 4.3 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 02 மாதங்கள் செல்வதற்கு முன் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தால் நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் 2016 மே 02 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினதும் சங்கப் பதிவாளரினதும் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள்** | | | **அவதானிப்புக்கள்** |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | | உபயோகப் பதிவேடுகள் நாளதுவரையாக்கப்படாமை |
| (ஆ) | சொத்துக்கள் நிர்வாகம் | | குறித்த திகதியிலுள்ளவாறு பொருள் மெய்மையாய்வு நடாத்தப்படாமை |
| (இ) | நிதிக்கட்டுப்பாடு | (i) | கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து கடன் அறவிடுவதில் தாமதம் மற்றும் பின்தொடர் நடவடிக்கைகள் உரிய பிரகாரம் மேற்கொள்ளப்படாமை |
| | | (ii) | மிகைப் பணம் முதலீடு செய்யப்படாமை |